பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

# இளம் கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு பரிசு

வடமாகாணத்தில் வாழ்ந்து வருகின்ற இளங்கலைஞர்களின் கலைச்சேவையினை ஊக்குவிக்கும்முகமாக 40 வயதிற்குட்பட்ட துறைசார்ந்த ஆளுமைமிக்க இளம் கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு பரிசு இவ்வருடம் நடைபெறவுள்ள வடமாகாண பண்பாட்டுப்பெருவிழாவில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. போட்டி விபரங்களும், போட்டிக்கான பொது நிபந்தனைகளும் வருமாறு

**விருது வழங்கப்படவுள்ள கலைஞர்களின் எண்ணிக்கை - 14**

1. கவிதை
2. சிறுகதை
3. நாவல்
4. வாத்தியக்கலை (தவில்,நாதஸ்வரம்,புல்லாங்குழல்,மிருதங்கம்,வயலின்,வீணை,ஓர்கன்,ஆர்மோனியம் போன்றன)
5. நடனம்
6. ஓவியம்
7. சிற்பம்
8. கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடைகூத்து)
9. நாடகம் (எழுத்துரு, நடிப்பு, நெறியாள்கை)
10. இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு)
11. ஊடகம் மற்றும் திரைப்படத்துறை
12. இசைநாடகம்
13. புகைப்படம்
14. கைவினை

**விதிமுறைகள்**

2018 - 12 - 31 அன்று நாற்பது வயதினைப் பூர்த்தி செய்யாதவராக இருக்க வேண்டும்.
பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் கடமையாற்றுபவர்கள் இவ்விருதிற்காக விண்ணப்பிக்க முடியாது. ஒருவர் பலகலைத்துறைகளில் ஈடுபட்டிருந்தாலும் பிரதானமாக எக்கலைச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றாரோ அத்துறைக்கே விண்ணப்பிக்க வேண்டும். வயதினை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் இணைக்கப்படல் வேண்டும். கலைச்செயற்பாடுகள் தொடர்பான விபரங்களைப் பொருத்தமான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.( புகைப்படங்கள்,பத்திரிகைச் செய்திகள், நிகழ்வுகளின் இறுவெட்டுக்கள் மற்றும் இதர ஆவணங்கள் போன்றன) தெரிவு செய்யப்படும் கலைஞரது புகைப்படத்துடன் அவரது கலைச் செயற்பாடுகள் பற்றிய குறிப்பினையும் வரைந்து அனுப்புதல் வேண்டும்.

(1) ஒவ்வொரு துறைக்கும் கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கும், தகுதிக்கும் ஏற்ப தெரிவுக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக வழங்கப்படவுள்ள விருதுகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

(3) நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

(2) விண்ணப்பங்கள் யாவும் 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

திருமதி சி.சுஜீவா, ஒப்பம் - சி.சத்தியசீலன்,
உதவிப்பணிப்பாளர், செயலாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம். கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு

உதவிப்பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்